Lions Club of

# Erode Supreme

Official Bulletin - Nov - Dec 2021





## ஆரோக்கியமான உணவு! நோய் எதிர்ப்பு சக்தி...!



# தலைவர் உரை



அன்பு அரிமாக்கள் அனைவருக்கும்! வணக்கம்...

மூன்றாவது இதழின் மூலம் உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி...

அனைவருக்கும் இனிய புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

எந்த நிகழ்வையும் வித்தியாசமாகவும், புதுமையாகவும் திட்டமிடுவதில் சுப்ரீம்க்கு நிகர் சுப்ரீம் என்பதை நிரூபிக்கும் வகையில் கடந்த ஆறு மாதங்கள் நிகழ்முறைக் கூட்டங்கள், சேவைத்திட்டங்கள், பொருளீட்டுத் திட்டமான பட்டாசு, இனிப்பு விற்பனை, 27ம் ஆண்டு மாநில அளவிலான சுப்ரீம் பேச்சாளன் பேச்சுப் போட்டி, உறுப்பினர்கள் பெருக்கம், இலவச கண் சிகிச்சை முகாம் போன்ற நிகழ்வுகள் எனலாம்.

'பெரிதினும் பெரிது கேள்' என்ற பாரதியின் வரிகளின் படி முயற்சி இல்லாமல் எதுவும் நடக்காது என்பதற்கு ஏற்றபடி இவ்வாண்டு புதிய முயற்சியாக பொருளீட்டுத் திட்டமான பட்டாசு விற்பனை செய்யப்பட்டது. இதற்கு அரிமாக்களாகிய உங்களுடைய மேலான ஒத்துழைப்பினால், இந்த திட்டமும், இனிப்பு விற்பனையும் வெற்றி அடைந்தது.

இதற்காக உழைத்திட்ட திட்டத் தலைவர்கள் அரிமா P.K.சரவணன், அரிமா M.ராமசாமி, முன்னாள் தலைவர்கள் அரிமா V.A.குணசேரன், அரிமா S.பாலகிருஷ்ணன், அரிமா M.கார்த்திக் உதவித்தலைவர்கள், இயக்குநர்கள் மற்றும் அரிமாக்கள், புதிய உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

28 அரிமாக்களுடன் துவங்கப்பட்ட நமது சங்கம் இவ்வாண்டு 16 புதிய உறுப்பினர்களை இணைத்து தற்போது 309 உறுப்பினர்கள் உள்ளார்கள் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த உன்னத நிலையை அடைய அரும்பாடுபட்ட அரிமாக்கள் அனைவருக்கும் நெஞ்சார்நத நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

324E அரிமா மாவட்டத்தில் தொடர்ந்து கண்தானத்தில் முதலிடம் பெற்று வருகிறோம். இவ்வாண்டு இது வரையில் 22 கண்களை தானமாக பெற்றுள்ளோம். கண்தானம் பெற உதவிய அரிமாக்கள் மற்றும் குழுத்தலைவர் அரிமா E.சத்தியமூர்த்தி ஆகியோருக்கு எனது நன்றிகள்.

அத்தனை நிகழ்வுகளுக்கும் ஆலோசனைகளை வழங்கி வரும் முன்னாள் பன்னாட்டு இயக்குநர் அரிமா Er.K.தனபாலன், முன்னாள் மாவட்ட ஆளுநர் அரிமா D.ரவிச்சந்திரன், பட்டயத் தலைவர் அரிமா K.குமாரசாமி மற்றும் செயலர்கள், பொருளர் ஆகியோருக்கு எனது நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றிகள் பல...
அடுத்த இதழில் சந்திப்போம்...

அன்புடன்,
அரிமா K.C. தங்கமுத்து
தலைவர்

மனித உடலில் இருக்கும் மொத்த ரத்த நாளத்தின் நீளம் 96000 கிலோ மீட்டர்.

# செயலர்கள் அறிக்கை



அரிமா M. ரமேஷ்குமார்
செயலர் (நிர்வாகம்)



அரிமா V.M. வேல்முருகன்
செயலர் (சேவை)

அன்பு அரிமாக்களுக்கு வணக்கம்!

கடந்த ஆறு மாதங்களில் நடைபெற்ற நிகழ்முறைக் கூட்டங்கள் சேவைத் திட்டங்கள், பொருளீட்டுத் திட்டமான இனிப்பு பட்டாசு விற்பனை மற்றும் இலவச கண் சிகிச்சை முகாம்கள், கண் தானம் போன்றவைகளுக்கு உங்களுடைய மேலான ஒத்துழைப்பு வழங்கி தந்தமைக்கு இதழின் மூலம் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்....

| நாட்கள் | நிகழ்ச்சிகள் |
|---|---|
| 07.11.2021 | 9 வது நிகழ்முறைக்கூட்டம் (சரவெடி விளையாட்டு திருவிழா) |
| 08.11.2021 | ஐந்தாவது இயக்குநர்கள் குழுக்கூட்டம் |
| 18.11.2021 | 10 வது நிகழ்முறைக் கூட்டம் |
| 28.11.2021 | புதிய இளம் அரிமா சங்க துவக்கவிழா (விஐடி) கல்லூரி |
| 26.11.2021 | அட்சயா முதியோர் இல்லத்திற்கு உணவு |
| 02.12.2021 | 11 வது நிகழ்முறைக் கூட்டம் |
| 08.12.2021 | ஆறாவது இயக்குநர்கள் குழுக்கூட்டம் |
| 16.12.2021 | 12 வது நிகழ்முறைக் கூட்டம் |
| 19.12.2021 | N.L. கருணை முதியோர் இல்லத்திற்கு உணவு |

ஏங்க... நீங்களாவது உங்க நண்பரிடம்
சொல்லக்கூடாதா?
அவருக்குப் பாத்த பொண்ணு
நல்லாவே இல்ல...

நான் ஏன் சொல்லணும்?
பாவிப்பயல் எனக்கு
அவன் சொன்னானா?



# 9 வது நிகழ்முறைக் கூட்டம்




சங்கத்தின் 9 வது நிகழ்முறைக் கூட்டம் 07.11.2021 அன்று காலை 10.00 மணிக்கு சுப்ரீம் இரத்த வங்கி கூட்டரங்கில் நடைபெற்றது.

கூட்டம் சரியாக காலை 10.00 மணிக்கு தலைவரால் தொடங்கப்பட்டது. தலைவரின் வரவேற்பு உரையில் பொருளீட்டு திட்டம் குறித்து விரிவாக பேசினார்.



கூட்டத்தில் சிறப்புப் பேச்சாளராக ஜேசி. கௌதம் அசோக் அவர்கள் கலந்து கொண்டு பல்வேறு விளையாட்டுக்களை நடத்தினார். மேலும் ஜேசி. கௌதம் அசோக் அவர்கள் உறுப்பினர்களை பல்வேறு குழுக்களாக பிரித்து பல்வேறு விளையாட்டுக்களை நடத்தி உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சி ஊட்டினார். விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது. கூட்டத்தில் கலந்து கொண்ட உறுப்பினர்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள். மேலும், தலைவர் அறிவிப்புகள் அறிவித்த பிறகு, செயலர் (நிர்வாகம்) நன்றி கூறினார். பிறகு தலைவரால் நிகழ்முறைக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.








ஒரு சராசரி மனிதனின் உடலில் இருக்கும் ரோமங்களில் எண்ணிக்கை சுமார் 5 லட்சம்.
ரோமங்கள் இல்லாத இடங்கள் உள்ளங்கை மற்றும் உள்ளங்கால்கள் மட்டுமே

# 10 வது நிகழ்முறைக் கூட்டம்

சங்கத்தின் 10 வது நிகழ்முறைக் கூட்டம் 18.11.2021 அன்று இரவு 8.00 மணிக்கு நமது சங்க ரத்த வங்கி கூட்ட அரங்கில் நடைபெற்றது. கூட்டம் தலைவரால் தொடங்கி வைக்கப்பட்டது. பிறகு சென்ற கூட்ட நடவடிக்கைககளை செயலர் நிர்வாகம் அவர்கள் அவைக்கு தெரிவித்தார். கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக சூழலியலாளர் ஓசை காளிதாஸ் அவர்கள் கலந்து கொண்டு மனங்களில் மரங்களை விதைப்போம் என்ற தலைப்பில் பேசினார்கள். சிறப்பு பேச்சாளர் தமது உரையில் மரங்கள் வளர்ப்பதின் அவசியம், அதனால் ஏற்படும் பயன்கள் குறித்து விரிவாகவும், நகைச்-சுவையுடனும் பேசினார். நாம் மரங்களை வளர்ப்பதன் மூலம் வருங்கால தலைமுறையினருக்கு தேவையான தூய்மையான காற்று, நீர், நிலம் ஆகியவற்றை உருவாக்கியத் தரமுடியும். எனவே, ஒவ்வொரு மனிதனும் மரம் வளர்ப்பதன் அவசியத்தினை உணர்ந்து மரங்களை வளர்க்க முயற்சிக்க வேண்டும்.

நாட்டில் உணவு பஞ்சம் வராமல் இருப்பதற்கு நாட்டிலுள்ள மரங்களும், ஆந்தைகளும் காரணம் என்று கூறினார். சிறப்பு பேச்சாளரின் உரைக்கு பிறகு தலைவர் அறிவிப்புகளை வெளியிட்டு கண்தானம் பெற்ற அரிமாக்களைப் பாராட்டிப் பேசினார். இறுதியாக செயலர் (நிர்வாகம்) நன்றி கூற, கூட்டம் தலைவரால் ஒத்திவைக்கப்பட்டது.



# சுப்ரீம் அரிமா சங்கத்தின்
# இரண்டாம் இளம் அரிமா சங்கம் துவக்க விழா

நமது சங்கத்தின் மூலம் இரண்டாவது இளம் அரிமா சங்கத்தின் துவக்க விழா, ஈரோடு, விஇடி கலை மற்றும் அறிவியல் கல்லூரி (இருபாலர்) வளாகத்தில் **23.11.2021** அன்று காலை **10.00** மணிக்கு நடைபெற்றது.

நிகழ்ச்சியில் மாவட்ட ஆளுநர் அரிமா T.ரவிவர்மா அவர்கள் சங்கத்தினை துவக்கி வைத்து உரையாற்றினார். கூட்டு மாவட்ட இளம் அரிமா சங்க ஒருங்கிணைப்பாளர் முன்னாள் ஆளுநர் அரிமா V.விஜயகுமார் கூட்டத்தில் கலந்து கொண்டு இளம் அரிமா லியோ V.ஹரிணி தலைமையிலான நிர்வாக குழுவினரை பதவியில் அமர்த்தி வைத்தார். மாவட்ட முதலாம் துணை ஆளுநர் அரிமா K.R.முத்தையா அவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு புதிய உறுப்பினர்களை சங்கத்தில் இணைத்து வைத்தார். விஇடி, செயலாளர் திரு. D.சந்திரசேகர் அவர்கள் விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு விழா பேருரையாற்றினார்கள். கூட்டத்தில் முன்னாள் பன்னாட்டு இயக்குநர் அரிமா Er.K.தனபாலன் அவர்கள் முதன்மை பேச்சாளராக கலந்து கொண்டு மாணவ மாணவிகள் சமூகம் சார்ந்த சேவைகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு தங்களை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்று பேசினார்.

இளம் அரிமா சங்க புதிய தலைவி லியோ V.ஹரிணி அவர்கள் தனது ஏற்புரையில் நாங்கள் சமூகம் சார்ந்த சேவைகளில் ஈடுபடுத்தி கொள்வோம் என்று பேசினார். விழாவில் மாவட்ட இரண்டாம் துணை ஆளுநர் அரிமா T.R.தமிழ்மணி அவர்கள் சமூக சேவைகள் குறித்து கூட்டத்தினரிடையே பேசினார்.

மண்டலத் தலைவர் அரிமா C.குணசேகரன், வட்டாரத் தலைவர் P.K.சரவணன், கல்லூரி முதல்வர் முனைவர் R.சரவணன் ஆகியோர் விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். விழாவில் சங்க நிர்வாகிகள் மற்றும் அரிமாக்கள் கலந்துகொண்டனர். விழாவிற்கான ஏற்பாடுகளை திட்டத்தலைவர் அரிமா S.அசோக்குமார் மிகவும் சிறப்பாக செய்திருந்தார்கள்.















கால் விரலில் வளரும் நகங்களை விட நான்கு மடங்கு அதிகமாக கைவிரல்களில் நகங்கள் வேகமாக வளரும்.
கைகளில் மற்ற விரல்களில் வளரும் நகங்களின் வளர்ச்சியை விட நடுவிரலில் நகத்தின் வளர்ச்சி அதிகமாக இருக்கும்.

# 11 வது நிகழ்முறைக் கூட்டம்

சங்கத்தின் 11 வது நிகழ்முறைக் கூட்டம் 02.12.2021 அன்று இரவு 8.00 மணிக்கு அரிமா இரத்த வங்கி கூட்டரங்கில் நடைபெற்றது. தலைவரின் வரவேற்புரைக்கு பின்பு, செயவர் (நிர்வாகம்) சென்ற மாத கூட்ட நடவடிக்கைகளை வாசித்தார். பிறகு கூட்டத்தின் சிறப்பு விருந்தினர்கள் டாக்டர் ஜெயபிரகாஷ் ஜெகதீசன் அவர்களை நேசம் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முனைவர் வெற்றிவேல் அவர்கள் அவைக்கு அறிமுகப்படுத்திவைத்தார். டாக்டர் ஜெயபிரகாஷ் ஜெகதீஷ் அவர்கள் ஈரோட்டில் மனநல மருத்துவராக உள்ளார். இவர் கூட்டத்தில் மனதை காப்பாற்றுங்கள் உயிரை காத்திருங்கள் என்ற தலைப்பின் ஒலி மற்றும் ஒளி காட்சிகள் மூலமாக விரிவாக பேசினார். மருத்துவர் தனது பேச்சில் உலகத்தில் தற்கொலையில் 1 லட்சம் பேரில் 11 பேர் தினமும் இறக்கிறார்கள் என்றும் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது என்றும் கூறினார்.

மேலும், இந்தியாவில் தற்கொலை இறப்பு விகிதத்தில் தமிழ்நாடு 4வது இடத்தில் உள்ளது என்றும் கூறினார். தற்கொலையினால் ஏற்படுகின்ற இறப்பு விகிதமானது மற்ற நோயினால் ஏற்படுகின்ற இறப்பு விகிதத்தை காட்டிலும் அதிகமாக உள்ளது என்றும் கூறினார்.



தற்கொலைக்கு பல காரணங்கள் இருந்தாலும் அவர்களுக்கு சரியான நேரத்தில் ஆலோசனை கொடுத்தால் அவர்கள் தற்கொலை முயற்சியை கைவிடுவதற்கு வாய்ப்பு தற்கொலை செய்து கொள்பவர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்காகவே உலகளவில் பல்வேறு அமைப்புகள் உள்ளன என்று கூறினார். அதுபோன்ற அமைப்பு ஈரோட்டிலும் உள்ளது என்று கூறினார். மருத்துவரின் உரைக்கு பிறகு நேசம் ஒருங்கிணைப்பாளர் முனைவர் வெற்றிவேல் அவர்கள் நேசம் அமைப்பின் நோக்கம், செயல்பாடுகள் ஆகியவை குறித்து மிக விரிவாக பேசினார். நேசம் அமைப்பானது தற்கொலைக்கு முயற்சிப்பவர்களுக்கு ஆலோசனை வழங்கும் அமைப்பாகும், அமைப்பானது 24 மணி நேரமும் செயல்படும். அமைப்பினை தொலைபேசியின் மூலம் தொடர்பு கொண்டு ஆலோசனை பெற்றுக் கொள்ளலாம் என்றும் கூறினார். மேலும், இந்த இணைப்பில் சேவை பணியாற்ற விருப்பமுள்ளவர்கள் தங்களை இணைத்துக் கொள்ளலாம் என்று கூறினார். செயலர் (நிர்வாகம்) நன்றி கூற கூட்டம் தலைவரால் ஒத்தி வைக்கப்பட்டது.





# 12 – வது நிகழ்முறைக் கூட்டம்

சங்கத்தின் 12வது நிகழ்முறைக் கூட்டம் 16.12.2021 அன்று இரவு 8.00 மணிக்கு அரிமா இரத்த வங்கி கூட்ட அரங்கில் நடைபெற்றது. தலைவரின் வரவேற்புரைக்கு பின்பு செயலர் (நிர்வாகம்) சென்ற கூட்ட நடவடிக்கை குறித்து பேசினார். பிறகு கூட்டத்தில் 'அசத்தப்போவது யார்' புகழ் ஈரோடு சீனு அவர்கள் 'சிரிக்கலாம் வாங்க' என்ற தலைப்பில் நகைச்சுவை நிகழ்ச்சி வழங்கினர். ஈரோடு சீனு அவர்கள் மிகவும் நகைச்சுவையாக பேசினார். மேலும், பாட்டு பாடியும் அரிமாக்களை மகிழ்வித்தார்.

கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக முன்னாள் மாவட்ட ஆளுநர் அரிமா S.மணி அவர்கள் கலந்து கொண்டு நகைச்சுவையுடன் சிறப்புரையாற்றினார். அவர் தனது பேச்சில் நகைச்சுவையுடன் பேசுவது என்பது ஒருகலை என்றும் நகைச்சுவையுடன் பேசுவது கடினம் என்றும் கூறினார். மண்டலத் தலைவர் அரிமா C.குணசேகரன் அவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு நகைச்சுவையுடன் வாழ்த்துரை வழங்கினார்கள்.

சங்க முதலாம் உதவி தலைவர் மற்றும் இனிப்பு மற்றும் கார விற்பனை திட்டத்தலைவர் அரிமா M. இராமசாமி அவர்கள் இனிப்பு மற்றும் கார விற்பனையில் தங்களை ஈடுபடுத்திக் கொண்ட அரிமாக்களின் பெயர்களை கூறி அவர்கள் ஆற்றிய சேவைகள் குறித்து விரிவாக பேசி அவர்களுக்கு நன்றிகளை தெரிவித்தார்.

பட்டாசு விற்பனை திட்டத்தலைவர் அரிமா P.K. சரவணன் அவர்கள் பட்டாசு விற்பனையில் தங்களை முழு மூச்சுடன் ஈடுபடுத்திக் கொண்ட அரிமாக்கள் பற்றியும் அவர்கள் ஆற்றிய சேவைப் பணிகளை பாராட்டி நன்றி கூறினார்.












# மகிழ்வித்து மகிழ்



அந்த வீட்டுப் பெண் எப்போதும் வேலைப் பளுவின் காரணமாகவும், குடும்ப உறுப்பினர்கள் பற்றிய அக்கறையினாலும் ஒரு பதற்றத்தோடயே இருப்பார்... எரிச்சலும் கொள்வார்... ஆனால் ஒரு சில தினங்களாக பதற்றமோ, கோபமோ, எரிச்சலோ இன்றி அவர் அமைதியோடு காணப்பட்டார்!...

ஒரு நாள் அவரது கணவர்,... 'நான் நண்பர்களோடு சேர்ந்து பியர் அருந்த போகிறேன்'... என்று அந்த பெண்ணிடம் கூறினார்... அவரும் அமைதியாக சம்மதித்தார்...

மகன் தனது தாயாரிடம் தயங்கியவாறு, 'அம்மா நான் எல்லா பாடங்களிலும் பின் தங்கி இருக்கிறேன்' என்றான்... அதற்கு அந்த பெண்ணும், 'ஒழுங்காக படித்தால் உன்னால் முடியும்... முடியவில்லை என்றால் மறுபடியும் அதே வகுப்பில் இருந்து படி' என்றார் அமைதியாக....

மகள் ஓடி வந்து, 'அம்மா என் காரை விபத்துக்குள்ளாக்கி விட்டேன்' என்றாள் பதற்றத்தோடு... அதற்கு தாய், 'கொண்டு போய் சரி செய்து விடு' என்றார்...

குடும்ப உறுப்பினர்கள் அவரின் அமைதியை கண்டு குழப்பம் கொள்ள ஆரம்பித்தனர். ஏதாவது மருந்துக்களை பாவித்து தன்னை அமைதிப்படுத்திக் கொள்கிறாரோ என்று கவலைப்பட தொடங்கினர்...

ஒரு நாள் அந்த பெண்மணியே எல்லோரையும் அழைத்து அமர வைத்து அதற்கான காரணத்தைக் கூறினாள்....

சில உண்மைகள் புரிய எனக்கு நீண்ட காலம் எடுத்தது... அதாவது அவரவர் வாழ்க்கைக்கு அவரவர் தான் பொறுப்பு... என்னுடைய கோபம், என்னுடைய பதற்றம், என்னுடைய பயம், என்னுடைய மன அழுத்தம், என்னுடைய தைரியம் எதுவும் உங்கள் பிரச்சினைகளை தீர்க்க போவதில்லை... அவை என் ஆரோக்கியத்தை கெடுத்து என் பிரச்சினைகளைத் தான் அதிகரிக்கும்...

என் அன்பையும், தைரியத்தையும் மட்டுமே உங்களுக்கு என்னால் கொடுக்க முடியும்... உங்களுக்கு தேவைப்பட்டால் என் அறிவுரைகளை நான் தருவேன்... உங்களுக்காக நான் பிரார்த்தனை செய்வேன். ஆனால் உங்கள் வாழ்க்கையை நான் வாழ முடியாது...

ஏனெனில் என்னை சார்ந்து நீங்கள் இந்த பிறவியை எடுக்கவில்லை. இது உங்களுக்கு கிடைத்துள்ள வாழ்க்கை... உங்கள் பிரச்சினைகளுக்கு நீங்களே பொறுப்பு கூறல் வேண்டும்... உங்கள் பிரச்சினைகளை களைந்து உங்கள் சந்தோசத்தை நீங்களே தேடுமளவுக்கு நீங்களும் எல்லா அறிவையும் பெற்றுள்ளீர்கள். ஆகவே தான் நான் அமைதியாகி விட்டேன்'...

குடும்பமே வாயடைத்துப் போனது!!... அவர்களின் செயல்பாடுகளுக்கு அவர்களே பொறுப்பு என்று அனைவரும் உணர்ந்து விட்டால் வாழ்க்கை அமைதிப் பூங்காவாக மாறும்...

இயற்கையின் நியதி...

என்றும்

அரிமா சிவலட்சுமி சரவணன்

# அஜினோமோட்டோ




அஜினோமோட்டோ என்னும் ஒரு சுவை கூட்டும் உப்பு... அதை சர்க்கரை என்றும் சொல்லலாம்...! பொதுவாக எல்லா சீன வகை உணவுகளில், சுவை கூட்ட சேர்க்கப்படும் இந்த அஜினோமோட்டோ பற்றி, நாம் என்ன அறிந்து வைத்திருக்கிறோம் என்றால்... அது லைட்டா தூவி விட்டால், டேஸ்ட் இல்லாத உணவு கூட ருசிக்கும். ஆனால் அதிகமாக யூஸ் பண்ணினால் முடி கொட்டும் அவ்வளவு தான் என்று... ஆனால் உண்மையில் இதன் வரலாற்றை அறிந்தால்?

அஜினமோட்டோ என்பது நாம் நினைப்பது போல, அது ஒரு கடல் உப்பின் பெயரல்ல... அது ஒரு கம்பெனியின் பெயர், ஜப்பானில் 1917 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த நிறுவனத்தின் பெயரே அதன் பொருளுக்கும் ஒட்டிக்கொண்டது..

உண்மையில் இந்த உப்பின் பெயர் Monosodium Glutamate (MSG) என்பதாகும், இதனை மருத்துவ உலகில் Slow Killer என்கிறார்கள்.. ஜப்பான் தலைநகர் டோக்கியோ, சிவோவை தலைமையிடமாக கொண்டு, கிகுனே இகெடா என்பவரால், 1917ல் இந்த அஜினோமோட்டோ தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டது.

அப்போது கடல் படுகைகளில் வளரும் ஒரு பூஞ்சை மற்றும் பாசி செடி (Seawee) வகைகளில் இருந்து எடுக்கப்பட்ட ஒரு வகை உப்பு தான் Monosodium ஆகும்... முதலில் கிகுனே இகெடா, 1909ல் அவர் தனது வீட்டில் நடத்தி வந்த வைத்தியசாலையில், அதனை மருந்தாக பயன்படுத்தி வந்தார்...

பிறகு உணவுகளில் சேர்த்து, அதில் ருசி கூட்டப்பட்டிருந்ததை அறிந்து, பிறகு, அதனை உபயோகித்து Seasoning, Cooking Oil, Sweetener, Amino Acids வரை தயாரித்து, பின் Pharmaceutical துறையிலும் இந்த உப்பை அறிமுகம் செய்தார்... முதலில் அது தயாரிக்கப்பட்ட விதம் என்னவோ உயர் தரமானதாக இருந்தது.

ஆனால் 1917இல் அமெரிக்க நிறுவனத்துடன் கைகோர்த்து, வியாபார நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட தொழில்சாலையில், Glutamate என்னும் செயற்கை அமிலத்தையும், அந்த Monosodium உப்போடு கலந்துவிட்டு வியாபாரத்தை அதிகப்படுத்தினர்.. Glutamate என்பது ஒரு அடிமைப்படுத்தும் காரியமாகும்.. ஒரு முறை உண்டால், மீண்டும் மீண்டும் சுவைக்க தூண்டும் போதை பொருள் போன்றதொரு சுவையூக்கி ஆகும்..

முதலில் இந்த glutamate ஐ உபயோகித்து, Artificial Sweetener என்னும் Aspartame ஐ தயாரித்து வந்தனர். பிறகு இதன் அபாயமறிந்து, அமெரிக்காவில் தடை செய்து விட்டனர் ஆனால் அதன் மறுரூபமே இந்த அஜினோமோட்டோ உப்பாகும். இன்றைய அவசர உலக சமையல் குறிப்புகளில், தவறாமல் இடம் பெறும் இந்த அஜினோமோட்டோ உப்பை, பயன்படுத்தாத நாடுகளே இல்லை எனலாம்..

நமது உடலில் இருக்கும் எலும்புகளில் அதிகமானவை கைகளில்தான் இருக்கின்றன. இரண்டு கை மற்றும் கை விரல்களில் மட்டும் 54 எலும்புகள் இடம்பெற்றுள்ளன.

சாலையோர கடைகள் தொடங்கி, மல்டி குஷன் ரெஸ்டாரண்ட் வரை.. சென்னை முதல் நியூயார்க் வரை என எல்லா உணவகங்களிலும், இதனை ருசிகூட்ட பயன்படுத்தாதவர்கள் இல்லை..

முன்பெல்லாம் சைனீஸ் வகை உணவுகளில் தான், அஜினோமோட்டோ தூவப்படும் என்ற மாயை போய், தமிழகத்து ரசம் வரை இதை தூவ ஆரம்பித்து விட்டார்கள்... சரி இதை நாம வாங்கி பயன்படுத்த வேண்டாம் என நினைத்து புறக்கணித்தாலும், நாம் உபயோகிக்கும் அத்தனை வகையான பதப்படுத்தப்பட்ட உணவு பொருள்களிலும், இது மறைமுகமாக கலக்கப்பட்டுள்ளது..

அது நாம் விரும்பியும், விரும்பாமலும் நம் நாவை அந்த சுவைக்கு அடிமைப் படுத்துகிறது, குறிப்பாக குழந்தைகள்...

அவர்கள் உண்ணும் பாக்கெட் சிப்ஸ், கிரீம் பிஸ்கட், சாதாரண பிஸ்கட், நூடுல்ஸ், இன்ஸ்டன்ட் சூப், மசாலா ஐட்டங்கள், டின்னில் வரும் மீன், சிக்கன், ரெடிமேட் சப்பாத்தி, பரோட்டா, சமோசா, பப்ஸ், சாஸ் வகைகள், சோயா பொருட்கள், சாக்லேட்கள், KFC, Pizza, Maggi மற்றும் சில குளிர்பானங்கள் என எல்லாத்திலும் அஜினோமோட்டோ என்னும் MSG Slow Killer உண்டு, அதனால் தான் இந்த Lays, Kurkure வகையறாக்களை உண்ணும் நம் வாண்டுகள், அதற்கு அடிமையாகிறார்கள்.

உண்பதால் வரும் பக்க விளைவுகள்:

1. ஆணோ பெண்ணோ இருபாலருக்கும் முடி கொட்டுவது உறுதி
2. Glutamate இரத்தத்தில் இன்சுலின் அளவை அதிகப்படுத்துவதால், அதிகமான பசி எடுக்கிறது. நாம் உணவை அடிக்கடி உண்ண உண்ண ஊளைச்சதை போடுகிறது, பிறகு அதை குறைப்பது மிக கடினம்.. உடல் எடை கூடினால், தானாக சுகரும் இதய நோயும் இலவசமாக வரும்.
3. குழந்தைகள் மற்றும் கர்ப்பிணிகளுக்கு, இந்த அஜினோமோட்டோ கொடிய விஷமாகும்.. ஐந்து வயது குழந்தைக்கும் தீராத தலைவலியை உருவாக்கும் தன்மை கொண்டது.
4. நரம்பு மண்டலத்தில் அதீத உற்சாகத்தை உருவாக்கி, பிறகு பயங்கரமான பலவினத்தை உண்டாக்கி விடும். இதனை மருத்துவர்கள் Over Stimulation of Nervous System என்கிறார்கள்.
5. இருதய நோய்களாக அதிபயங்கர துடிப்பும் சில நேரம் வலியும் உருவாக்கும்.
6. முகத்தில் எந்நேரமும் ஒரு எரிச்சல் இருப்பது போலவே சிலர் உணருவார்கள், அரிப்பும் தோன்றும், சிலரது முகம் கருத்திருக்கும்.
7. வழக்கமாக இரத்த கொதிப்பு, தைராய்டு, நீரிழிவு, ஆஸ்துமா, உணவு ஒவ்வாமை, அதீத வியர்வை சுரப்பியால் உண்டாகும் Dehydration என்னும் நீர்ச்சத்து குறைதல், கண்களில் ரெட்டினா குறைபாடு எல்லாம் உருவாக அஜினோமோட்டோ காரணியாகிறது.

இவை எல்லாம் ஒரு நாள், நம்மை புற்றுநோயிடம் இழுத்துச் செல்லும்.. அஜினோமோட்டோவை தவிர்ப்போம்.



# கண் தானம்

இதுவரையில் 22 ஜோடிகள் கண் தானமாக பெற்றுள்ளோம். இதற்கு உதவிய அரிமாக்கள், கண்தான குழுத்தலைவர் அரிமா E. சத்தியமூர்த்திக்கு இதழின் மூலம் பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.... தொடர்ந்து அரிமா மாவட்டம் 324E, நமது சங்கம் கண்தானத்தில் முதலிடம் பெற்று வருகிறோம்.

| நாள் | விழி கொடுத்தவர்கள் | விழி பெற உதவிய அரிமாக்கள் |
|---|---|---|
| 05.11.2021 | திருமதி. R. தெய்வானையம்மாள் | அரிமா R. வேலுச்சாமி |
| 09.11.2021 | திரு. ராமசாமி கவுண்டர் | அரிமா S. பாலகிருஷ்ணன் |
| 14.11.2021 | திருமதி. சிவகாமி | அரிமா M. கார்த்திக் |
| 26.11.2021 | திரு. P. நாச்சிமுத்து முதலியார் | அரிமா K. செங்கோட்டையன் |
| 10.12.2021 | திரு. ராஜாம் பால் | அரிமா E. சத்தியமூர்த்தி |
| 11.12.2021 | திரு. C. சந்திரசேகர் | அரிமா E. சத்தியமூர்த்தி |
| 12.12.2021 | திரு. T. துரைசாமி | அரிமா E. சத்தியமூர்த்தி |
| 17.12.2021 | திரு. A. பெரியசாமி | அரிமா E. சத்தியமூர்த்தி |
| 19.12.2021 | திருமதி. தனம் | அரிமா G. ரங்கசாமி |
| 22.12.2021 | திரு. S. அண்ணாமலை | அரிமா R. வேலுச்சாமி |
| 22.12.2021 | திரு. தனபாலன் | அரிமா K. ரவிச்சந்திரன் |
| 22.12.2021 | திரு. நரசிம்மாச்சாரி | அரிமா E. சத்தியமூர்த்தி |

## அதிக கண்தானம் பெற்றவர்கள்

| | |
|---|---|
| அரிமா E. சத்தியமூர்த்தி | 8 ஜோடிகள் |
| அரிமா R. வேலுச்சாமி (முன்னாள் தலைவர்) | 5 ஜோடிகள் |
| அரிமா G. ரங்கசாமி | 3 ஜோடிகள் |
| அரிமா K. ரவிச்சந்திரன், அரிமா M. கார்த்திக் | தலா 2 ஜோடிகள் |

அதிக கண்தானம் பெற்றுத்தரும் அரிமாக்களுக்கு நமது சங்கம் சார்பாக பரிசுகள் வழங்கப்படுகிறது.

| முதல் பரிசு | இரண்டாம் பரிசு | மூன்றாம் பரிசு |
|---|---|---|
| ரூ. 12,000/ | ரூ. 6,000/ | ரூ. 3,000/ |

மனித உடலின் வளர்ச்சி 21 வயதோடு நின்றுவிடுகிறது. கடைசிவரை வளர்வது காது மட்டுமே.

# 2 வது வட்டார ஆலோசனைக் கூட்டம் மற்றும் கூட்டுக் கூட்டம்



நமது சங்கம் சார்ந்த வட்டாரத்தின் இரண்டாவது வட்டார ஆலோசனைக் கூட்டம் மற்றும் கூட்டுக் கூட்டம் 11.12.2021 அன்று மாலை 6 மணிக்கு பெருந்துறை, குழந்தைவேல் கல்யாண மண்டபத்தில் நந்தவனத்தில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் சங்க நிர்வாகிகளான தலைவர், செயலர் (நிர்வாகம்) செயலாளர் (சேவை), பொருளாளர், முதலாம் துணைத் தலைவர் ஆகியோர் கலந்து கொண்டனர். பின்பு பெருந்துறை அரிமா சங்கம் ஏற்று நடத்திய கூட்டுக் கூட்டத்தில் நமது சங்கத்தை சார்ந்த நிர்வாகிகள் மற்றும் அரிமாக்கள் கலந்து கொண்டனர். வட்டாரத்தை சார்ந்த பிற சங்க நிர்வாகிகள் மற்றும் அரிமாக்களும் கலந்து கொண்டனர்.



கூட்டத்தில் கௌரவ விருந்தினர்களாக அரிமா D.ரவிச்சந்திரன் முன்னாள் மாவட்ட ஆளுநர், முதலாம் துணை மாவட்ட ஆளுநர் அரிமா K.R.முத்தையா, இரண்டாம் துணை மாவட்ட ஆளுநர் அரிமா T.R. தமிழ்மணி ஆகியோர் கௌரவ விருந்தினர்களாக கலந்து கொண்டனர். கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக முன்னாள் பன்னாட்டு இயக்குநர் அரிமா Er.K. தனபாலன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பாக பேசினார். மேலும் மாவட்ட அமைச்சரவை நிர்வாகிகள் மற்றும் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள்.







# அமுதசுரபி – 4

நவம்பர் 26 ந் தேதி அன்று சங்கத்தின் முன்னாள் தலைவர் அரிமா V.குருசாமி அவர்களின் பெற்றோர் நினைவாக அட்சயம் முதியோர் ட்ரஸ்ட்டை சார்ந்த முதியவர்களுக்கு மூன்று நேரமும் உணவு வழங்கப்பட்டது. விழாவில் சங்கத் தலைவர், பொருளாளர், புதிய உறுப்பினர் மனோகரன், முன்னாள் தலைவர் அரிமா V.குருசாமி மற்றும் அவர் குடும்பத்தை சார்ந்த அனைத்து உறுப்பினர்களும் கலந்து கொண்டு உணவு வழங்கினார்கள்.





# அமுதசுரபி – 5





சங்கத்தின் முன்னாள் தலைவர் அரிமா M.விஸ்வநாதன் தன் பெற்றோர் நினைவாக N.L.கருணை முதியோர் இல்லத்தில் உள்ள முதியவர்களுக்கு 19.12.2021 அன்று மதிய உணவு வழங்கினார். விழாவில் சங்க செயலாளர் (நிர்வாகம்) அரிமா ரமேஷ்குமார் மற்றும் முன்னாள் தலைவர் அரிமா விஸ்வநாதன் அவர் துணைவியார் அரிமாட்டி அனுசூயா விஸ்வநாதன் ஆகியோர் கலந்து கொண்டு முதியோர்களுக்கு உணவு வழங்கினார்கள்.





மனித மூளையில் சுமார் 100 மில்லியன் நரம்பு செல்கள் உள்ளன. நாம் சுவாசிக்கும் மொத்த ஆக்ஸிஜனில் 20 சதம் மூளைக்குச் செல்கிறது.

# நோய் எதிர்ப்பு சக்தி



நோய் எதிர்ப்பு சக்தியை வலுப்படுத்துவது தற்போது மிகவும் அவசியம். வெளியிலிருந்து வரும் வைரஸிடமிருந்து நம்மை நாமே காப்பாற்றிக் கொள்ள வேண்டிய அதே நேரத்தில் நாம் தொடக்கத்திலிருந்து நமது உடலுக்கு உள்ளேயும் சில பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இதற்கு நாம் நமது நோய் எதிர்ப்பு மண்டலத்தை வலுப்படுத்த வேண்டும். நமது நோய் எதிர்ப்பு சக்தி சிக்கலானது, நம்மைச் சுற்றியுள்ள சூழலால் பெருமளவில் தாக்கம் பெறக் கூடியது.

நோய் எதிர்ப்புசக்தியின் இயக்கத்தைப் பாதிக்கக் கூடிய பல்வேறு காரணிகள் உள்ளன. ஆரோக்கியமான வாழ்க்கை முறை என்பது ஊட்டச்சத்து மிகுந்த உணவை உண்பது, தூய்மையைக் கடைப்பிடிப்பது, நடைப்பயிற்சியையும் உடற் பயிற்சியையும் அன்றாடம் செய்வது, நல்ல உணர்வு ரீதியான நலத்தையும் மன நலத்தையும் பராமரிப்பது, போதுமான அளவு தூங்குதல் போன்றவற்றை உள்ளடக்கும். இந்தக் காரணிகள் தான் நோய்எதிர்ப்பு சக்தியை முறைப் படுத்துவதிலும் வலுப்படுத்துவதிலும் முக்கியக் காரணிகளாக இருக்கின்றன.

## வயிற்றின் நுண்ணுயிர்த் தொகுதி

ஆரோக்கியமான உடல் ஆரோக்கியமான வயிற்றைக் கொண்டிருக்கும். நம் வயிற்றுக்குள் வாழும் நுண்ணுயிர்களை ஒட்டு மொத்தமாக நுண்ணுயிர்த் தொகுதி என்று அழைப்பார்கள். கரோனா வைரஸ் போன்ற நோய்க் கிருமிகளை நம் உடல் எதிர் கொள்வதில் இந்த நுண்ணுயிர்த் தொகுதி மிக முக்கியமான பங்கு வகிக்கிறது.

ஆகவே தான், ஆரோக்கியமான வயிற்றுப் பகுதியைப் பராமரிப்பது முக்கியம். அது தான், நுரையீரலையும் சுவாச மண்டலத்தையும் சேதப்படுத்தக் கூடிய செரிமானக் கோளாறைத் தடுக்கஉதவும்.

இது தான் நமது நோய் எதிர்ப்பு சக்தி மீது நாம் கவனம் கொள்ள வேண்டும் என்பதற்கான காரணம். வயிற்று நுண்ணுயிர்த் தொகுதிகளை நல்ல உணவுத் திட்டத்தைக் கொண்டு கட்டுப்படுத்த முடியும் என்று சமீபத்திய ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன.

நோய்எதிர்ப்புசக்தியை வலுப்படுத்துபவை என்று நிரூபிக்கப் படாத பல வழிமுறைகள் பரிந்துரைக்கப்படுகின்றன.

அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்படாத அந்த வழிமுறைகளைப் பின்பற்றுவதை விட பாரம்பரியமாக நாம் உண்டு வந்த ஆரோக்கியமான உணவு முறையைப் பின்பற்றுவது நல்லது.

தலைமுறை தலைமுறையாக நம்மிடம் வந்து சேர்ந்த சமையல் முறைகள் நமது நோய் எதிர்ப்பு சக்தியை வலுப்படுத்துவதற்குத் தேவையானவற்றைக் கொண்டிருக்கின்றன என்பதை நாம் அறிவோம். அவை நமது வயிற்றில் உள்ள நல்ல நுண்ணுயிர்கள் மீது நேர்மறையான தாக்கத்தைச் செலுத்தும். நோய்எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் ஆன்ட்டி ஆக்ஸிடன்ட்டுகள், கனிமங்கள் போன்றவை அதிக அளவில் காணப்படும் உணவுகள்:

**வைட்டமின் ஏ அதிகமாகக் காணப்படும் உணவுகள்:**
தானியங்கள், பருப்புகள், மஞ்சள் மற்றும் ஆரஞ்சு நிறக்காய்கறிகள், பச்சை நிறம் கொண்ட கீரை போன்ற காய்கறிகள்

**வைட்டமின் பி அதிகமாகக் காணப்படுபவை (பி6, பி9, பி12):**
தானியங்கள், பருப்புகள், பச்சை நிறம் கொண்ட கீரை போன்ற காய்கறிகள்

**வைட்டமின் சி அதிகமாகக் காணப்படுபவை:**
ஆரஞ்சு, எலுமிச்சை, கொய்யா, கிவி, நெல்லிக்காய், காலிஃப்ளவர், தக்காளி, குடைமிளகாய், புதினா

**வைட்டமின் ஈ அதிகமாகக் காணப்படுபவை:**
விதைகள், பச்சைநிறக் கீரை போன்ற காய்கறிகள், காய்கறி எண்ணெய்கள்

**வைட்டமின் டி அதிகமாகக் காணப்படுபவை:**
முட்டை, கொழுப்பான மீன்கள், பால், பால் பொருட்கள். சூரிய ஒளி நம் உடல் மீது படுவதாலும் வைட்டமின் டி யின் அளவு அதிகரிக்கிறது

**இரும்புச்சத்து அதிகமாகக் கொண்டவை:**
தானியங்கள், பருப்புகள், உலர்ந்த பழங்கள், மீன்கள், கோழிக்கறி

**துத்த நாகம் அதிகம் காணப்படுபவை:**
முளைகட்டிய கோதுமை, உலர்ந்த பீன்ஸ், விதைகள், சோயாகட்டி (டஃ்பு), கடல் உணவுகள்

**செலினியம் அதிகமாகக் காணப்படுபவை:**
தானியங்கள், விதைகள், காளான்கள், இறைச்சி, கோழிக்கறி

**ஆன்ட்டி ஆக்ஸிடன்ட்டுகள், சுவையூட்டிகள் அதிகமாகக் கொண்டவை:**
பூண்டு, வெங்காயம், இஞ்சி, மிளகு, பசுந்தேநீர் (கிரீன்டீ) சிவப்பு இறைச்சிக்குப் பதிலாக மீன், கோழி, முட்டை போன்றவற்றை உண்ணலாம்.

மேற்குறிப்பிட்டவற்றை உண்பதுடன் ஆரோக்கியமான வாழ்க்கைமுறையைப் பின்பற்றுவதும் அவசியம். ஆரோக்கியமான வாழ்க்கைமுறை என்பது ஊட்டச்சத்துள்ள உணவுகளை உண்பது, மது, புகைப்பழக்கம் போன்றவற்றைத் தவிர்த்தல், பொழுதுபோக்கு மூலம் மன அழுத்தத்தைப் போக்கிக் கொள்ளுதல், போதுமான அளவு இடைவெளியற்ற உறக்கம், தினமும் உடற்பயிற்சி மேற்கொள்ளுதல், நடைப்பயிற்சி மேற்கொள்ளுதல், மெல்லோட்டம் (ஜாகிங்) மேற்கொள்ளுதல் போன்றவற்றையும் உள்ளடக்கும்.

நன்றி :
இந்து தமிழ் நாளிதழ்



மனிதனின் வயிற்றில் உள்ள செரிமான அமிலமானது துத்தநாகத்தையே கரைக்கும் சக்தி கொண்டது

# மொழியும் நிலமும் - எஸ்ரா

வரலாறு திரிக்கப்பட்டு சிதைக்கப்படும் காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். வரலாற்றை தங்கள் சுயலாபங்களுக்காக திருத்தி எழுதும் மோசடிக்காரர்களால் மற்ற அறிவு துறைகளை விட வரலாறுதான் அதிக நெருக்கடிகளை சந்திக்கிறது. காலத்தின் மனசாட்சியாக வரலாறு இருப்பது பலருக்கு உறுத்தலாக இருக்கிறது. வரலாற்றை முற்றிலும் அழித்துவிட முடியாது என்பதால் அதை திரித்துக் கூறுவதில் அக்கறை காட்டுகிறார்கள்.

வரலாற்றை பாதுகாக்க முக்கிய தேவை மொழியைப் பாதுகாப்பதே. மொழி என்பது வெறும் பரிவர்த்தனைக் கான வாகனம் மட்டும் அல்ல. கல்வெட்டுக்களிலும் செப்பேடுகளிலும் சுவடிகளிலும் பதிவுசெய்யப்பட்ட வரலாறுகளே, கடந்த காலத்தை இன்று நாம் புரிந்துகொள்ள உதவுகின்றன. வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாப்பதில் எப்போதுமே நாம் அக்கறை இல்லாதவர்களாகவே இருக்கிறோம்.

இந்தியாவில் மொத்தம் 3372 மொழிகள் பேசப்படுவதாக ஒன்றிய அரசு கூறுகிறது. அவற்றில் 216 மொழிகளை 10 ஆயிரத்திற்கும் குறைவானவர்களே பேசுகின்றனர். அரசமைப்புச் சட்டம் 8 ம் அட்டவணைப்படி இந்தியாவில் 23 மொழிகள் அங்கீகாரம் பெற்றவையாக உள்ளன. மீதம் உள்ள மொழிகள் வெறும் பேச்சு வழக்கில் மட்டுமே இருக்கின்றன. அவற்றில் பெரும்பாலான மொழிகளுக்கு எழுத்து வடிவம் கிடையாது. இந்தியாவின் சில மாநிலங்களில் அந்த மாநிலங்களின் முக்கிய மொழிகளை விட பிறமொழி பேசுபவர்கள்தான் பெரும்பான்மையாக வசிக்கின்றனர்.

சிக்கிம் மாழலத்தில் பெரும் பான்மையாக பேசப்படும் மொழி நேபாளி. 63 சதவிகித சிக்கிம் மக்கள் நேபாளி தான் பேசுகின்றனர்.

திரிபுராவில் அந்த மாநில மொழியான திரிபுரியை விட பெங்காலி தான் பெரும்பான்மையான மக்கள் பேசும் மொழியாக திகழ்கிறது. பஞ்சாப் மாநில தலைநகராகவும் யூனியன் பிரதேசமாகவும் இருக்கும் சண்டிகரில் பஞ்சாபியை விட இந்தி மொழிதான் பெரும்பான்மையினர் பேசும் மொழியாக உள்ளது.

இந்தியாவில் கோலோச்சிய பல மொழிகள் இன்று அடையாளம் இல்லாமல் அழிந்துபோய் விட்டன. ஒரு மொழி அழியும்போது அந்த மொழியில் பதிவாகியிருந்த மக்கள் வரலாறும் சேர்ந்தே அழிகிறது. அழிந்துவிடும் நிலையில் உள்ள மொழிகளின் விவரத்தை யுனெஸ்கோ நிறுவனம் 2009 ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளது. அதில் 2473 மொழிகள் அழியும் அபாயத்தில் இருக்கின்றன என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தியாவில் கடந்த 50 ஆண்டுகளில் ஐந்து மொழிகள் முற்றிலும் அழிந்துவிட்டன. 42 மொழிகள் கிட்டத்தட்ட அழியும் நிலையில் உள்ளன. மேலும் 63 மொழிகள் நிச்சயம் அழிந்துவிடும், 82 மொழிகள் அழியும் அபாயம் உள்ளவை என சுட்டிக்காட்டப்பட்டு இருக்கிறது.

மைசூரில் உள்ள இந்திய மொழிகள் கழகம், உலக நாடுகளின் நிலையோடு ஒப்பிடுகையில் தாய்மொழி அழியும் அபாயம் இந்தியாவில் அதிகமாகவே இருக்கிறது என்ற ஆய்வினை சமர்ப்பிக்கிறது. இது தொடர்ந்தால் ஆஸ்திரேலியப் பழங்குடிகளுக்கு நேர்ந்த கதிதான் இந்தியாவிலும் ஏற்படும். ஒரு காலத்தில் ஆஸ்திரேலியாவில் 250 மொழிகள் பழங்குடியினரால் பேசப்பட்டன. இன்று அவற்றில் இரண்டு மட்டுமே இருக்கிறது.

(சு)வாசித்தவர்

அரிமா G.N. சித்தார்த்தன்

## பன்னாட்டு செய்திகள்

- இந்தியாவின் முன்னாள் பன்னாட்டு இயக்குனர் A.P. சிங் அவர்கள் வருகிற பன்னாட்டு மாநாட்டில் இரண்டாம் பன்னாட்டு துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட உள்ளார்.
- 21-22 பன்னாட்டு மாநாடு ஜுன் 25-29 வரை கனடா நாட்டில் மான்டிரியலில் நடைபெற உள்ளது
- LCIF வின் இயக்குனர் கூட்டம் ஜனவரி 12-18 தேதி வரை காணொளியின் வாயிலாக நடைபெற்றது
- நமது ISAME மாநாடு டிசம்பர் 15-18 வரை காணொளியில் நடைபெற்றது. நமது மாவட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட பதிவுகள் செய்யப்பட்டன
- டிசம்பர் 15ம் தேதி ISAME சார்ந்த தலைவர்களுக்கான கூட்டம் நடைபெற்றது
- பிப்ரவரி 16-18 இசாமி பகுதியை சார்ந்த தலைவர்களுக்கான கூட்டம் கொச்சியில் நடைபெற உள்ளது
- நமது கூட்டு மாவட்ட கூட்டம் நவம்பர் 29-30 தேதிகளில் மதுரையில் நடைபெற்றது. 324 B மாவட்டம் ஏற்று நடத்தியது
- நமது கூட்டு மாவட்டத்தின் சார்பாக RLLI 15-18வரை சென்னையிலும், FDI ஜனவரி 4-7 சென்னையிலும் நடைபெற்றது. நமது முதல் துணை மாவட்ட ஆளுநர் முத்தையா அவர்கள் FDI யில் கலந்து கொண்டார்
- கூட்டு மாவட்ட அளவிலான ALLI பிப்ரவரி மாதம் 22-25 கொடைக்கானலில் நடைபெறவுள்ளது.

## மாவட்ட செய்திகள்

- காலாண்டு விருது வழங்கும் விழா நவம்பர் 28ம் தேதி Excell Engineering கலையரங்கில் நடைபெற்றது.
- மாவட்ட கல்வி அறக்கட்டளை சார்பாக 75 மாணவ மாணவிகளுக்கு கல்வி ஊக்கத் தொகை வழங்கும் விழா ஜனவரி 2ம் தேதி நடைபெற்றது.
- இது வரை நான்கு மண்டல சந்திப்புகள் நடைபெற்றுள்ளன.
- மாவட்ட தலைமை பண்பு பயிலரங்கம் மார்ச் மாதம் நடைபெற உள்ளது.
- கோவிட்டிற்காக பன்னாட்டு அறக்கட்டளை சார்பாக பெறப்பட்ட நிதியின் மூலம் வாங்கப்பட்ட பொருட்கள் ஜனவரி 19ம் தேதி ஒசூரில் வழங்கப்படவுள்ளது.



**மனைவி :** உலகம் பூரா போய் தேடினாலும் என்ன மாதிரி மனைவி கிடைக்கமாட்டா...

**கணவன் :** எனக்கென்ன பைத்தியமாடி புடிச்சிருக்கு... மறுபடியும் உன்னை மாதிரியே தேட...!

## “நீண்ட நீண்ட காலம் நீ நீடு வாழ வேண்டும்
## வானம் தீண்டும் தூரம் நீ வளர்ந்து வாழ வேண்டும்...“

### ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதம் பிறந்தநாள் காணும் ஈரோடு சுப்ரீம் அரிமா சங்க உறுப்பினர்கள்

**ஜனவரி**

01 அரிமா K. ஆறுமுகம்
06 அரிமா N.நல்லசாமி
07 அரிமா T. அர்ஜுனன்
08 அரிமா தேன்மொழி தியாகராஜன்
09 அரிமா P. சந்திரசேகர்
09 அரிமா S. குணசேகரன்
11 அரிமா M. கமலநாதன்
13 அரிமா D. ரவிச்சந்திரன்
15 அரிமா K.C. தாங்கமுத்து
15 அரிமா E.L. கிரி
15 அரிமா G. ஆனந்த்
15 அரிமா N. மலர்
18 அரிமா டாக்டர் S.P. சுகுமார்
19 அரிமா V. அனுசியா
23 அரிமா A.S. விமல் நாதன்
24 அரிமா சந்திரகலா குமாரசாமி
29 அரிமா M. விஸ்வநாதன்
31 அரிமா M. ரமேஷ் குமார்




**பிப்ரவரி**

01 அரிமா D. ரவிச்சந்திரன்
02 அரிமா பத்மினி மயில் வேல்
03 அரிமா A.ஹேம ப்ரீத்தி
04 அரிமா S. மூர்த்தி
08 அரிமா A. தனலட்சுமி
08 அரிமா R. விஜயா ரவிச்சந்திரன்
09 அரிமா ராதா மனோகரன்
10 அரிமா S. சரவணன்
10 அரிமா M. பரமசிவம்
10 அரிமா C. அசோக்குமார்
12 அரிமா S. சுகாசினி
13 அரிமா K. ரவிச்சந்திரன்
13 அரிமா V.M. கந்தசாமி
17 அரிமா V. சுகுமாறன்
18 அரிமா P. ஆனந்தன்
19 அரிமா D. சிவலிங்கம்
21 அரிமா K. குமாரராஜா
21 அரிமா B. சரவன மூர்த்தி
22 அரிமா D. நவநீதகிருஷ்ணன்
22 அரிமா V.M.வேல்முருகன்
24 அரிமா S. விஜய லக்ஷ்மி
25 அரிமா S. ராஜரத்தினம்

### பிறந்தநாளன்று நன்கொடை வழங்கி நல்உள்ளங்கள் நவம்பர் & டிசம்பர் 2021

| | |
|---|---|
| அரிமா S. தனம் யோகானந்த் | ரூ. 500/ |
| அரிமா M. இராமசாமி | ரூ. 500/ |
| அரிமா M. கார்த்திக் | ரூ. 500/ |
| அரிமா R. வேலுச்சாமி | ரூ. 500/ |
| அரிமா K.C. தங்கமுத்து | ரூ. 1000/ |
| அரிமா S. சண்முகானந்த் | ரூ. 500/ |
| அரிமா A. சுந்திரம் | ரூ. 500/ |
| அரிமா P. பூபதி | ரூ. 500/ |
| அரிமா R. யாசின் | ரூ. 500/ |
| அரிமா A. மயில்வேல் | ரூ. 500/ |
| அரிமா D. ஆர்த்தி | ரூ. 500/ |
| அரிமா M. மாயகிருஷ்ணன் | ரூ. 500/ |
| அரிமா B. தினேஷ்குமார் | ரூ. 500/ |
| அரிமா K. சுகுமார் | ரூ. 500/ |
| அரிமா K.K. சுரேஷ்குமார் | ரூ. 500/ |
| அரிமா P. நாகராஜன் | ரூ. 500/ |
| அரிமா K. ஜோதிராமலிங்கம் | ரூ. 500/ |
| அரிமா P. குணசேகரன் | ரூ. 500/ |
| அரிமா K. தங்கவேல் | ரூ. 2000/ |
| அரிமா S. பாலகிருஷ்ணன் | ரூ. 1000/ |
| அரிமா P. மாணிக்கம் | ரூ. 500/ |
| அரிமா Dr. சௌமியா அசோகன் | ரூ. 500/ |
| அரிமா K. கலைச்செல்வன் | ரூ. 1000/ |
| அரிமா Su. மஞ்சுஸ்ரீ | ரூ. 500/ |

நினைவுப் பரிசு வழங்கி வரும் வாழ்த்துதல் குழுத் தலைவர் அரிமா P.ரமேஷ் அவர்களுக்கும் மற்றும் WhatsAppல் பிறந்த நாள் வாழ்த்து மடல் தயாரித்து வெளியிட்டு வரும் அரிமா S.பிரபு அவர்களுக்கும், நன்கொடை அளித்த அரிமாக்களுக்கும் இதழின் மூலம் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம். இதுவரையில் வசூலான தொகை ரூ. 38,050/



# இரத்ததான முகாம்





சூர்யா கல்லூரியிலுள்ள இளம் அரிமா சங்கம் 28.12.2021 அன்று இரத்த தானமுகாமினை சிறப்பாக நடத்தினார்கள். முகாமில் சங்கத் தலைவர், செயலர் (நிர்வாகம்) செயலர் (சேவை), அரிமா மருத்துவர் சித்ரா சௌந்தராஜன், இளம் அரிமா சங்கப் பொறுப்பாளர்கள், கல்லூரி முதல்வர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முகாமில் மொத்தம் 34 யூனிட் இரத்தம் தானமாக பெறப்பட்டது. முகாமிற்கான ஏற்பாடுகளை இளம் அரிமா சங்க நிர்வாகிகள் மற்றும் சுப்ரீம் அரிமா இரத்த வங்கி மக்கள் தொடர்பு அலுவலர் ஆனந்த் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.



மனைவி : ஏங்க... சனி பெயர்ச்சிக்கும், குரு பெயர்ச்சிக்கும் என்ன வித்தியாசம்?

கணவன் : நீ ஊருக்கு போனா அது சனி பெயர்ச்சி, அதுவே நீ உன் தங்கையுடன் திரும்பி வந்தா அது குரு பெயர்ச்சி...!




ஆண்களின் உடலில் சுமார் 6.8 லிட்டர் ரத்தம் இருக்கும். பெண்களின் உடலில் ஐந்து லிட்டர் ரத்தம் மட்டுமே இருக்கும்.

# ஆசிரியர் உரை



சங்கத்தின் மூன்றாவது இதழ் மூலமாக அரிமாக்களாகிய உங்களை சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். அரிமாக்கள் அனைவருக்கும் என்னுடைய 2022 ம் ஆண்டின் புத்தாண்டு வாழ்த்துக்களையும், பொங்கல் நல்வாழ்த்துகளையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த 2 இதழ்களில் வெளியிடப்பட்ட கட்டுரைகளுக்கு விமர்சனங்களை தெரிவித்த அரிமாக்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நாம் மீண்டும் கொரோனா வைரஸ் பிடியில் சிக்கி துன்பத்திற்கு ஆளாகி வருகிறோம். மேலும் கொரோனாவினால் தாக்குண்ட நபர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. இந்த நிலையை குறித்து ஐஐடி கான்பூரை சார்ந்த பேராசிரியர் மணிந்த்ரா அகர்வால் அவர்கள் கீழ்வருமாறு தனது கருத்தினை தெரிவிக்கிறார்கள். இந்தியாவில் நாடு தழுவிய அளவில் நமக்கு கிடைத்துள்ள முதல்கட்ட தகவலின்படி கொரோனா இந்த மாத (ஜனவரி) இறுதிக்குள் அதன் உச்சத்தை தொடும் விரைவில் கொரோனா இரண்டாவது அலையின் போது உருவான எண்ணிக்கையும் தாண்டும். இந்த மூன்றாவது அலையில் கொரோனா உச்சம் மிகவேகமாக நேர்கோட்டில் உயரும் என்பது குறிப்பிடத்தக்கது. இப்படி அதிகரிக்கும் கொரோனா மார்ச் மாத பிற்பாதியில் சரிவை நோக்கி சென்று இயல்பு நிலைக்கு வரும்.

இந்த சூழ்நிலையில் நாம் உலக சுகாதார நிறுவனம் வழிகாட்டுதலின்படி முக கவசங்களை சரியான முறையில் கண்டிப்பாக பயன்படுத்துதல், சமூக இடைவெளி கடைபிடித்தல் மற்றும் கைகளை அடிக்கடி கிருமிநாசினி கொண்டு சுத்தம் செய்தல் போன்ற முறைகளை தவறாமல் கடைபிடிக்க வேண்டும்.

பொதுமக்கள் அரசு கூறும் வழிகாட்டுதலின்படி நடந்துகொண்டால் இரண்டாவது அலையின் போது நாம் எதிர்கொண்ட சவால்களை முறியடித்தது போல் வரக்கூடிய மூன்றாவது அலையின் கடுமையான சூழ்நிலையை எதிர்கொள்ள சாத்தியமாகும். இந்த அரிய பணியில் அரிமாக்களாகிய நாமும் பங்கு உண்டு செயலாற்ற வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இந்த இதழில் வெளியிட கட்டுரைகள் கொடுத்து உதவிய அரிமா சித்தார்தன் மற்றும் அரிமாட்டி சிவலட்சுமி சரவணன் ஆகியோருக்கும், இந்த இதழ் வெளியிட உதவிய அரிமாட்டி சசிகலா தனபாலன் அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

அரிமா முனைவர் P. குணசேகரன்

***99421 47858***

ஒவ்வொரு சிறுநீரகமும் ஒரு மில்லியன் வடிகட்டிளை கொண்டுள்ளது அவைகள் ஒரு நிமிடத்திற்கு 1.3 லிட்டர் ரத்தத்தை வடிகட்டுகிறது.

# THULASI READYMIX

கனவு மெய்ப்பட வேண்டும்...

Erode: 95 85 84 00 00
Salem: 97 86 35 00 00




## RR THULASI BUILDERS

Printed By : SPY Printers, Erode. 98427 29669